# தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (05.07.2023 முதல் 09.07.2023)

**அறிக்கைஎண் 053/2023** **தேதி.04.07.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 30.06.23 முதல் 03.07.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 66 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20-22 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (30.06.2023 முதல் 03.07.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 09.07.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30/06 | 01/07 | 02/07 | 03/07 | தேதி | நாள்-1 05/07 | நாள்-2 06/07 | நாள்-3 07/07 | நாள்-4 08/07 | நாள்-5 09/07 |
| 0.5 | 0.0 | 0.0 | 1.2 | மழை (மி.மீ) | 22 | 14 | 8 | 3 | 4 |
| 32 | 31 | 34 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 31 | 30 | 30 | 29 | 29 |
| 23 | 22 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 21 | 20 | 20 | 20 |
| 6 | 5 | 6 | 7 | மேக மூட்டம் (ஆக்டர்) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 68 | 76 | 69 | 85 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 70 | 70 |
| 70 | 69 | 66 | 74 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 70 | 50 | 50 | 50 |
| 20 | 22 | 20 | 22 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 12 | 10 | 8 | 10 | 8 |
| 230 | 200 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 250 | 230 | 230 | 230 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (05.07.2023 முதல் 09.07.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29°செ முதல் 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 20°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரை வீசக்கூடும்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு

| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 05-07-2023 | 21.0 | 22.0 | 20.0 | 28.0 | 21.0 | 20.0 | 23.0 | 19.0 | 20.0 | 23.0 | 21.0 | 26.0 | 32.0 | 25.0 |
| 06-07-2023 | 14.0 | 14.0 | 13.0 | 20.0 | 15.0 | 12.0 | 16.0 | 15.0 | 13.0 | 18.0 | 14.0 | 18.0 | 15.0 | 17.0 |
| 07-07-2023 | 7.0 | 8.0 | 6.0 | 12.0 | 10.0 | 6.0 | 10.0 | 7.0 | 6.0 | 13.0 | 8.0 | 11.0 | 4.0 | 11.0 |
| 08-07-2023 | 2.0 | 2.0 | 1.0 | 5.0 | 1.0 | 1.0 | 2.0 | 1.0 | 1.0 | 2.0 | 1.0 | 4.0 | 8.0 | 3.0 |
| 09-07-2023 | 1.0 | 2.0 | 1.0 | 5.0 | 2.0 | 1.0 | 2.0 | 1.0 | 1.0 | 2.0 | 2.0 | 4.0 | 6.0 | 3.0 |

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு மிதமானது முதல் கன மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 8 -16 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மழை எதிர்பார்க்கப்படுவதால் நீர்பாசனம் செய்வதை ஒத்தி வைக்கவும். மேலும் அனைத்து பயிர்களிலும் போதிய வடிகால் வசதியினை உறுதி செய்யவும்.<br>அதிகபடியான மழை நீரினை பண்ணைக்குட்டைகளில் வடித்து பின் தேவைப்படும்போது பயன்படுத்தலாம். |
| நெல் | நடவு | எதிர்பார்க்கப்படும் மழையினால் நெல் நாற்றாங்காலில் மற்றும் சமீபத்தில் நடவு செய்த நெல் நாற்றுக்களுக்கு ஏற்படும் பாதிப்பை தவிர்க்க போதுமான வடிகால் வசதி செய்யவும். |
| மக்காசோளம் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி ஒரு கிலோ மக்காசோள விதைக்கு 10கிராம் இமிடாகுளோபிரிட் 70S கலந்து விதைக்கலாம். |
| சோளம் | வளர் பருவம் | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மானாவாரி சோளத்தில் தழைசத்து உரமாக எக்டருக்கு யூரியா 50 கிலோ இடவும். |
| சிறு குறு தானிய பயிர்கள் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மேற்கு தொடர்ச்சி மலையோரப்பகுதிகளில் சிறு குறு தானிய பயிர்களை விதைக்கலாம். |
| நிலக்கடலை | வளர் பருவம் | 40 நாட்கள் வயதுடைய நிலக்கடலையில் எக்டருக்கு 400 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்கவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும்.<br>பின்பட்டகரும்பு நடவு செய்யும் விவசாயிகள் நடவைதொடரவும். மேலும் ஏற்கனவே நடவுசெய்யப்பட்ட இடங்களில் சீரானபயிர் எண்ணிக்கை இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மழையுடன் மணிக்கு 8 - 12 கி.மீ வரை வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும். |
| மஞ்சள் | வளர் பருவம் | கடந்த வாரம் பெய்த மற்றும் எதிர்பார்க்கப்படும் தூறல் மழையினை பயன்படுத்தி முப்பது நாட்கள் வயதுடைய மஞ்சளில் களை எடுக்கவும்.<br>எதிர்பார்க்கப்படும் வானிலையில் 30 மற்றும் 60 நாள் வயதுடைய மஞ்சளுக்கு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா மற்றும் 10 கிலோ பொட்டாஷ் கிலோ இடவும். |

| | | |
|---|---|---|
| தென்னை | | தென்னை மரத்தோப்பில் கிடைக்கும் மழையினை சேமிக்கும் வகையில் வட்ட பாத்தி அமைக்கவும். மேலும் 5 வயதிற்கு மேலுள்ள ஒரு மரத்திற்கு 650 கிராம் யூரியா, 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ பொட்டாஸ் கலந்து உரமிடவும். மேலும் ஒரு மரத்திற்கு நுண்ணூட்ட சத்து கலவை 250 கிராம் அளவில் மண்ணின் மேற்பரப்பில் இடவும். |
| கால்நடை | | அதிகரித்து வரும் காற்றின் காரணமாக கால்நடை குடில்களில் ஈக்களின் தாக்கம் அதிகரிப்பதை தடுக்க, குடிலை நன்கு சுத்தப்படுத்தி பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலை நாள் ஒன்றுக்கு மூன்று முறை தெளிக்கவும். |

## குறுஞ்செய்தி

- மிதமான மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நீர்பாசனம் செய்வதை ஒத்தி வைக்கவும். போதிய வடிகால் வசதியினை உறுதி செய்யவும். வாழைக்கு முட்டுகொடுக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**